**G. VENKATASWAMY NAIDU COLLEGE (AUTONOMOUS),**
**KOVILPATTI – 628 502** Thoothukudi District
(Re-accredited with **"A"** Grade by NAAC & STAR College by DBT Govt. of India)
Tamil Nadu, E-mail: gvncollegeoffice@gvncollege.edu.in
Website : www.gvncollege.org College : 04632-220389 Cell: 8300920389

முனைவர் மூ.சுப்புலட்சுமி, எம்.எஸ்ஸி, எம்.பில், பி.எச்டி., முதல்வர் (பொ)

நாள்: 30-07-2025

அன்பிற்குரிய பட்டதாரிகளே!

நமது கல்லூரியின் **பட்டமளிப்பு விழா எதிர்வரும் 14-08-2025 (வியாழக்கிழமை)** அன்று காலை 11.00 மணியளவில் சுயநிதிப் பாடப்பிரிவுகள் வளாகத்தில் அமைந்துள்ள ஸ்ரீ என்.தாமோதரன் நினைவுக் கலையரங்கில் வைத்து நடைபெற உள்ளது. இவ்விழாவிற்கு மாணவ, மாணவியர் தங்களது பெற்றோருடன் வருகை புரிந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றேன். இவ்விழாவில் **முனைவர் சா.வின்செண்ட், உறுப்பினர் செயலர், தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மாநில மன்றம் (Member Secretary, TNSCST))** அவர்கள் கலந்துகொண்டு பட்டம் வழங்கி விழாப் பேருரை ஆற்ற இசைவு தந்துள்ளார்கள்.

(2022-2023) ஆம் கல்வியாண்டில் இளங்கலை மற்றும் முதுகலைப் பட்டப்படிப்பை முடித்த மாணவ, மாணவியர் www.gvncollege.org என்ற இணையதளத்தில் சென்று விண்ணப்பிக்க வேண்டும். பட்டமளிப்பு விழாவில் நேரடியாகக் கலந்துகொள்வதற்குக் கட்டணமாக ரூ.1500/- (In person Convocation Fee Rs.1000 + Alumni life membership Rs.500) செலுத்த வேண்டும். விழாவில் கலந்து கொண்டு பட்டம் பெற இயலாத சூழல் ஏற்படின் அஞ்சல் வழியாகப் பட்டம் பெறுவதற்கு ரூ.1000/- (By Post Convocation Fee Rs.500 + Alumni life membership Rs.500) கட்டணமாகச் செலுத்த வேண்டும். இக்கட்டணத் தொகையை www.gvncollege.org என்ற இணையதளத்தில் நுழைந்து **E-service Menu-**ல் உள்ள **Convocation – 2025** உள்சென்று **Register Now** என்பதை கிளிக் செய்து அதில் கோரப்பட்ட விவரங்களை பூர்த்தி செய்து தகுந்த கட்டணத்தை **QR code-**ஐ **scan** செய்து கட்டிய பின் சமர்ப்பிக்க வேண்டும்.

பட்டமளிப்பு விழா அங்கி மற்றும் தொப்பி கல்லூரி வளாகத்தில் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. பட்டமளிப்பு விழா அங்கி மற்றும் தொப்பிக்கான முன்பணம் (**Refundable deposit**) ரூ.500/- மட்டும் (ரொக்கமாக) பட்டமளிப்பு விழா அன்று நேரில் செலுத்த வேண்டும். விழா முடிந்த உடன் காலதாமதமின்றி பட்டமளிப்பு அங்கி மற்றும் தொப்பி ஆகியவற்றை திருப்பிக் கொடுத்து விட்டு ரூ.500/-ஐ திரும்ப பெற்றுக்கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது. அவ்வாறு திருப்பித் தராமல் தவறும் பட்சத்தில் முன்பணம் திரும்ப வழங்க இயலாது எனத் தெரிவிக்கப்படுகிறது. மதிய உணவு வழங்கவும் பட்டதாரிகள் நிழற்படம் எடுக்கவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

**குறிப்பு:**

1) பட்டதாரிகள் பட்டமளிப்பு விழா அன்று காலை **9.00 மணி முதல் 10.30 மணிக்குள்** தங்கள் வருகையை தவறாது பதிவு செய்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.
2) குறிப்பிட்ட நேரத்திற்குள் வருகை தராத மாணவ, மாணவியர்களுக்கு அனுமதி இல்லை.

முதல்வர் (பொ)

# பட்டதாரிகளின் கவனத்திற்கு…

1) விழா அன்று காலை 9.00 முதல் 10.30 மணிக்குள் பட்டதாரிகள் அனைவரும் தவறாது தங்கள் பெயர்களைப் பதிவு செய்து கொண்டு தங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள இருக்கையில் அமர வேண்டும். நேரம் கடந்து வருபவர்கள் எக்காரணத்தைக் கொண்டும் பெயர் பதிவு செய்ய அனுமதிக்கப்படமாட்டார்கள்.

2) விழாவில் பங்கேற்க வரும் மாணவ, மாணவியர்கள் மற்றும் பெற்றோர்களுக்கு மதிய உணவு வழங்கப்படும். (மதிய உணவு நேரம்: பிற்பகல் 1.30 மணி முதல் 2.30 வரை)

3) பட்டமளிப்பு விழா அங்கி மற்றும் தொப்பிக்குரிய முன் பணம் ரூ.500/- ( Gpay கிடையாது)மட்டும் செலுத்தி அங்கியை பெற்றுக்கொள்ளலாம். விழா நிறைவடைந்த பின்னர் அங்கியை ஒப்படைத்துவிட்டு முன்பணமாகச் செலுத்திய ரூ.500/- ஐ திரும்ப பெற்றுக்கொள்ளலாம். அங்கி மற்றும் தொப்பியினை ஒப்படைத்தப் பின்பே விழா அரங்கினை விட்டு மாணவ மாணவியர் வெளியேற வேண்டும் என்று அறிவுறுத்தப்படுகிறார்கள்.

4) பட்டதாரிகளும், அவர்தம் பெற்றோர்களும் காலை 10.30 மணி அளவில் தங்களுக்கென ஒதுக்கப்பட்ட இருக்கையில் அமர்தல் வேண்டும்.

5) பட்டமளிப்பு விழா என்பது ஏனைய விழாக்களைப் போன்றதல்ல. இதனுடைய மாண்பையும் மகத்துவத்தையும் பேணிக்காக்க அனைவரும் முழு அமைதி காத்துச் சிறப்பிக்க வேண்டியது நமது தலையாய கடமையாகும். பேசுவதும், கைதட்டி ஆரவாரம் செய்வதும், இடையில் எழுந்து செல்வதும் மரபு மீறிய செயலாகும்.

6) பட்டமளிப்பு விழாக் குழுவினர் அரங்கினுள் வரும்போது அனைவரும் எழுந்து நின்று அக்குழுவினர் மேடையில் அமர்ந்த பின்னரே அமர வேண்டும்.

7) மேடையில் சான்றோர்களிடம் பட்டம் பெறும் போது இருகரம் கூப்பி மரியாதை செலுத்திப் பட்டம் பெற்றுக் கொள்வதும், எழுந்து நின்று உறுதிமொழி ஏற்றுக்கொள்வதும், விழாத்தலைவர் அறிவுறுத்திய பின் இருக்கையில் அமர்வதும் பட்டமளிப்பு விழாவிற்குரிய மகத்தான மரபாகும்.

8) பட்டதாரிகள் தங்களுடன் குழந்தைகளை இவ்விழாவிற்கு அழைத்து வரவேண்டாம் எனக் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விழா அரங்கினுள் குழந்தைகளுக்கு கண்டிப்பாக அனுமதி கிடையாது.

9) அரங்கினுள் கைப்பேசி உபயோகிப்பது முற்றிலும் தவிர்க்கப்பட வேண்டும்.

10) விழா நிறைவுறும் வரை அனைவரும் தவறாது தத்தமது இருக்கைகளில் அமர்ந்திருந்து அமைதி காக்க வேண்டும்.

11) விழா நிறைவில் தேசிய கீதம் இசைக்கும் பொழுதும் அதைத் தொடர்ந்து பட்டமளிப்புக் குழுவினர் அரங்கத்தினின்று வெளியே செல்லும்போதும் அனைவரும் எழுந்து நின்று மரியாதை செலுத்தி, அவர்கள் அரங்கத்தினின்று வெளியே சென்ற பின்னரே கலைந்து செல்ல வேண்டும்.

12) அங்கீகரிக்கப்பட்ட புகைப்படக் கலைஞரிடம் மட்டுமே நிழற்படம் எடுத்துக் கொள்ள அறிவுறுத்தப்படுகிறார்கள்.

13) பட்டதாரிகள் பெற்றோர் தவிர வேறு யாரையும் உடன் அழைத்து வர அனுமதி கிடையாது.

14) பட்டமளிப்பு விழாவினை கண்டுகளிக்க பெற்றோர்களுக்கென தனியாக செமினார் ஹாலில் பட்டமளிப்பு விழா நேரடியாக ஒளிபரப்பு செய்ய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. பட்டதாரிகள் தவிர வேறு எவருக்கும் பட்டமளிப்பு அரங்கிற்குள் அனுமதி கிடையாது.

**விழா சிறக்க அனைவரும் ஒத்துழைக்க வேண்டுகிறோம். நன்றி!**